# கேள்வி:

## "மதம் இன்றியே நீங்கள் மகிழ்ச்சியாயிருக்க முடியுமென்றால், மதத்தைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்?"

# பதில்:

*மதம் இன்றியே நீங்கள் மகிழ்ச்சியாயிருக்க முடியுமென்றால், மதத்தைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்? நாங்கள் ஆஸ்திரேலியாவில் ஊழியம் செய்து கொண்டிருக்கையில் இந்தக் கேள்வி அடிக்கடி எழும்பிற்று, அங்கிருந்த ஜனங்களுக்கு வேத வகுப்புகள் நடத்த நாங்கள் ஏற்பாடு செய்கையில், எப்போதாவது அவர்களின் வெறுப்புணர்வையும், அடிக்கடி அவர்களின் அக்கறையில்லாமையையும் நாங்கள் எதிர்கொள்ள நேர்ந்தது. நாங்கள் ஆராதனை செய்யும் சமயம் அவர்களை வரும்படி அழைத்தபோது பல சந்தர்ப்பங்களில் அவர்கள், ''இல்லை, நான் அங்கு வருவதற்கு எண்ணமில்லை" என்றோ அல்லது "அங்கு வருவதற்கு என்னால் முடியாது'' என்றோ பதில் கூறினார்கள். ஜனங்கள், மதத்தைப்பற்றி அக்கறையில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் அப்படி இருக்கலாமா?*

*மதத்தைப்பற்றி அக்கறையற்றவர்கள் பல சமயங்களில் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள் என்ற உண்மையானது இக்கேள்வியை இன்னும் சிக்கலாக்குகின்றது. ஆஸ்திரேலியாவின் ஒரு பத்திரிக்கைச் செய்தியின்படி, ஒரு பேட்டியொன்றுக்கு விடையளித்த பெரியவர்களில் 55 சதவிகிதத்தினர், "மிகுந்த மகிழ்ச்சியுடன்" இருப்பதாகவும், 43 சதவிகிதத்தினர் "ஓரளவு மகிழ்ச்சியுடன்" இருப்பதாகவும், 2 சதவிகிதத்தினர் மட்டுமே தாங்கள் "மகிழ்ச்சியுடன் இல்லை" என்றும் சுட்டிக்காட்டினர். அமெரிக்க ஐக்கிய தேசத்தில் நடத்தப்பட்ட இதே விதமான ஆய்விலும் அமெரிக்கர்கள் கூட இதே அளவு*

சந்தோஷமாய் இருப்பதாகத் தங்களைப்பற்றி அளவீடு செய்தனர்.[1]

இம்மகிழ்ச்சி அநேகமாக மத ஈடுபாடு இல்லாமலேயே அடையப் பெற்றதாயிருந்தது. ஆஸ்திரேலியர்களில் பலர் சபைக்குப் போவதில்லை. எடுத்துக்காட்டாக, ஒரு முன்மாதிரி ஆஸ்திரேலியர் நல்ல மனிதராகச் சித்தரிக்கப்படுகிறார். அவர் தமது நண்பர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வமுடன் இருக்கிறார்; ஆனால் தாம் பொது விடுதிகளுக்குச் செல்லுதல், ஒரு குடும்பத்தைப் பராமரித்தல், தமது சொந்தக் குடும்பத்தைப் பெற்றிருத்தல், சிறிது பணம் சேமித்தல், தனது தோட்டம் மற்றும் விளையாட்டு ஆர்வம் இவற்றிற்குப் போதிய நேரம் பெறுதல் ஆகியவைகள் அடங்கிய வாழ்வில் முழுமையாகத் திருப்தியடைகிறார். சூரியன், அலை சறுக்குதல் மற்றும் குடி வகைகள் ஆகியவையே பல ஆஸ்திரேலியர்களின் தெய்வங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. வேதத்தின் தேவன் இவருடைய வாழ்க்கையில் எந்த வித விளைவும் ஏற்படுத்துவதில்லை என்றும் கூறப்படுகிறது.

மதத்தைப்பற்றி இவரது கருத்து என்ன? இவரைப் பொறுத்த மட்டில் மதம் என்பது ஒரு வயதான, வியாதிப்பட்ட ஏழைக்கு உரியதாகும். உள்ளம், உடல் அல்லது பொருளாதார ரீதியாக பிரச்சனையுள்ளவர்கள் மட்டுமே தேவ பக்தியுள்ளவர்களாயிருக்கின்றனர். வாழ்க்கையில் பிழைத்திருக்க ஒரு ஊன்று கோலாக இவர்களுக்கு மதம் தேவைப்படுகிறது. ஆனால் சமநிலை மனதும், செல்வாக்கும் உள்ள, பலமான, சுயாதீனமுள்ள நடுத்தர அல்லது உயர் குடியைச் சேர்ந்த நபருக்கு இது தேவையில்லை. இவருக்கு ஒரு ஊன்று கோல் தேவையில்லை, எனவே இவர் மதத்தைக் குறித்துக் கவலைப்படுவதில்லை.

இப்படிப்பட்ட மனநிலை உள்ளவர்கள் ஆஸ்திரேலியாவில் மட்டுமல்ல, உங்கள் அருகிலும் வாழ்கின்றனர்; உங்களோடு பணிபுரிகின்றனர்; தெருவில் உங்களைச் சந்திக்கின்றனர்; சிறப்பங்காடியில் உங்களுக்காகக் காத்திருக்கின்றனர். அமெரிக்கர்களில் பெரும்பாலோருக்கு மதத்தைப்பற்றிச் சிந்திக்கப் பெரும்பாலும் நேரமே இருப்பதில்லை. பல அமெரிக்கர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் வாழ்வில் ஏற்படும் மாற்றங்களினிமித்தம் தேவன் மரித்தவராகவே காணப்படுகிறார்.

அவர்களின் நிலை சரியானதா? தேவபக்தியின்றியே ஒரு

சந்தோஷமான வாழ்க்கை வாழ முடியுமென்றால், மதத்தைக் குறித்து கவலைப்படக் காரணம் எதுவும் உள்ளதா? ஆம், நீங்கள் தேவபக்தியுள்ளவர்களாயிருப்பது அவசியம் என்பதே எனது பதில், ஆனால் ஏன்?

## ஏனெனில் மனிதன் ஒரு மிருகமல்ல

கிரேக்க புராணக் கதையில் பாதி ஆட்டுருவமும், பாதி மனித உருவமும் கொண்ட காட்டில் வாழும் தெய்வம் ஒன்றைப் பற்றிக் கூறப்படுகிறது. ஒரு வேளை, மனிதன் ஒரு பகுதி மிருகமாய் இருக்கலாம் என்று ஜனங்கள் எண்ணக் கூடும். ஆனால் நமக்கு நன்றாகத் தெரியும். அல்லது நாம் நன்கு அறிந்துள்ளோமா? துவக்கத்தில் இருந்த ஒரு செல் உயிரினத்திலிருந்து குரங்குவரை முன்னேறி குரங்கிலிருந்து மனிதன் தோன்றியதாக பரிணாமக் கொள்கை கூறுகிறது. எனவே மனிதன் ஒரு மிருகமேயன்றி வேறல்ல என்கிறது. நாம் இக்கொள்கையை மறுக்கிறோம்.

மனிதன் என்பவன் மற்ற எல்லா மிருகங்களிலிருந்தும் வேறுபட்ட படைப்பாய் இருக்கிறான், என்பதற்கு நல்ல காரணம் இன்னும் உள்ளது. தேவசாயலில் படைக்கப் பட்டதால் மனிதனுக்கென்று உயர்ந்த நோக்கங்கள் உண்டு என்பது மனிதனை மிருகங்களின்று வேறுபடுத்துகின்றது. “இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது” (2 பேது. 1:4). நமது மனித இயல்புக்கு அடிபணிந்து போவது நமது வாழ்வின் நோக்கமல்ல, ஆனால் தேவ இயல்பை பெறத் தொடங்குவதும், இன்னும் அதிகமாய் தேவனைப் போல் ஆவதுமே நமது வாழ்வின் நோக்கமாகும். நாம் வெறும் மிருகங்கள் அல்ல என்றால், நாம் என்ன செய்யும்படி தேவன் விரும்புகிறார், என்று நாம் கண்டறிய வேண்டாமா? நாம் தேவபக்தியுள்ளவர்களாக வேண்டாமா?

## ஏனெனில் வேதம் ஒரு தேவதைக் கதையல்ல

வேதம் என்பது தேவதைக்கதைகள், கற்பனை அல்லது

புராணக் கதைகளின் தொகுப்பல்ல. பல ஜனங்கள் அப்படி நம்புகின்றனர். அவர்கள் வேதத்தை மனித முயற்சியின் விளைவாக உண்டானதென்றும், சில உண்மைகளும், சில தவறுகளும், சில நிகழ்ச்சிகளும், சில வரலாறுகளும், சில கற்பனைக் கதைகளும் உள்ள ஒரு நூலாகப் பார்க்கின்றனர்.

இக்கருத்தைப் பொறுத்தமட்டில் இரு விஷயங்கள் தவறாகும். ஒன்று, வேதம் இதை மறுக்கிறது. 2 தீமோ. 3:16, 17 ஐக் கவனியுங்கள்: "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பித்தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." வேதத்தை ஏற்றுக் கொள்ளும் எந்த ஒரு மதமும் இந்த வசனத்தை உணர வேண்டும், ஏனென்றால் வேதத்தில் தேவதைக் கதைகள் அடங்கியிருக்கவில்லை என்று இவ்வசனம் போதிக்கின்றது. இரண்டாவதாக, உண்மையும் தவறும் கலந்த கலவையாக வேதம் இருக்குமென்றால், அதன் எந்தவொரு பாகத்தையும் சந்தேகமின்றி உண்மையென்று ஒருவர் நம்பி விட முடியாது. அந்த உண்மைகள் நம்பப்பட்டாலும், கிறிஸ்துவின் தெய்வீகம் உண்மையற்றுப் போக வாய்ப்புண்டு.

வேதம் ஒரு தேவதைக் கதையல்ல என்பதால், அதைப் படித்து, புரிந்து அதற்குக் கீழ்ப்படியத் தொடங்குங்கள். தேவபக்தியுள்ளவர்களாகத் தொடங்குங்கள்.

## ஏனெனில் மதம் என்பது மற்றவர்க்கு "உதவும் தன்மை" மட்டுமல்ல

"Mateship" என்பது ஒரு ஆஸ்திரேலியச் சொல் வழக்காகும். ஆஸ்திரேயாவில் ஒருவருக்கு துணைவர் அல்லது நண்பர்கள் என்பவர்கள் சில சமயங்களில் தனது மனைவி அல்லது குடும்பத்தாரைக் காட்டிலும் முக்கியமானவர்களாயிருப்பார்கள். "Mateship" என்றால் உங்கள் நண்பர்கள் அல்லது சக ஆஸ்திரேலியர்களை விசாரிப்பது என்று பொருளாகும். விசேஷமாக அவர்கள் உபத்திரவத்தில் இருக்கும் வேளையில் அவர்களின் தேவைகளுக்கு உதவுவது என்று பொருளாகும்.

ஆஸ்திரேலியர்கள் மற்றவர்களுக்குப் பணம் கொடுத்து உதவுவதில் மிகுந்த தாராள மனப்பான்மையுள்ளவர்களாயிருக்

கிறார்கள் என்று நாம் காண்கிறோம் - உதாரணமாக காட்டுத் தீயினால் எரிந்து போன வீடுகளை மறுபடி கட்ட அந்த ஜனங்களுக்கு உதவி செய்கின்றனர். அது நல்லது, ஆனால் மதம் என்பது இவ்வளவே என்று அநேக ஜனங்கள் உணர்ந்து கொள்வதே இங்கு பிரச்சனையாகும். ‘‘தேவன் விரும்புவ தெல்லாம் நான் மற்ற ஜனங்களுக்கு நன்மை செய்வதைத்தான்’’ என்று அவர்கள் எண்ணுகின்றனர். “நான் மற்ற ஜனங்களை நல்ல முறையில் நடத்தினால், அவள் நல்ல துணையாய் இருப்பாள்’’ என்பது அவர்களின் தத்துவம் ஆகும்.

ஜனங்கள் இதைத்தான் விரும்புகிறார்கள் என்று நீங்கள் அறிவீர்கள் இல்லையா? ஜனங்களுக்கு பணம் கொடுத்து, மற்ற உதவிகள் செய்து கொண்டிருப்பவர்கள் தாங்கள் சபைக்குச் செல்லவோ அல்லது தேவனுடைய மற்ற கட்டளைக்குக் கீழ்ப்படியவோ அவசியமில்லை என்று நம்புகின்றனர்.

நாம் மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று தான் தேவன் எதிர்பார்க்கின்றார் (மத். 7:12). இருப்பினும் அவர் எதிர்பார்ப்பது அது ஒன்று மட்டுமல்ல. “பிறனிடத்தில் அன்பு கூறுவாயாக’’ என்பது, இரண்டாவது கட்டளையாக இருக்குமிடத்தில், ‘‘தேவனிடத்தில் முழுமையாக அன்பு கூருவாயாக’’ என்பதே முதலாவது கட்டளையாய் உள்ளது (மாற்கு 12:30, 31). மற்றவர்களுக்கு உதவி செய்வது என்பது மட்டும் கிறிஸ்தவ மதம் ஆகிவிடாது. இது கிருபையினால் இரட்சிக்கப்படுதலைப் பற்றியாகும். நமது மதத்தைப் பற்றிப் பவுல் அதன் முக்கிய கருத்தை இப்படி விளக்குகிறார்: “நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்’’ (தீத்து 3:5). கிறிஸ்தவம் என்பது இரட்சிப்பைப் பற்றியதாகும், நீங்கள் செய்யும் நன்மைகள் மட்டும் உங்களை இரட்சிக்க முடியாது, நீங்கள் இரக்கத்தினால் இரட்சிக்கப்பட வேண்டும். அதாவது மதத்தில் உங்கள் நிலையை நீங்கள் காணத் தொடங்க வேண்டும்.

## ஏனெனில் இயேசு "தாழ்மையும் சாந்த குணமும்" மட்டும் உள்ளவரல்ல

கிறிஸ்துவை சிலர் நம்புகின்றனர், ஆனால் அவரை "தாழ்மையும் சாந்த குணமும்" உள்ளவராக மட்டும் காண்கின்றனர். அவர்களுக்கு அவர் மிக மென்மையானவராகவும், அன்புள்ளவராகவும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவராகவும் காணப்படுகிறார். எனவே அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவது பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. அதை நிறைவேற்றாவிடில் அவர் ஒன்றும் தங்களைத் தண்டிக்கப் போவதில்லை என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

இயேசு "தாழ்மையும் மன சாந்தமும்" உள்ளவராயிருப்பினும், சிலர் கூறுவது போல, அவர் கோபமுள்ளவராயும் இருக்கிறார். எடுத்துக்காட்டாக, யோவா. 8:24ஐ நினைத்துப் பாருங்கள்: "ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்." பாவம் நிலவிற்று என்று இயேசு நம்பினார். மேலும் பாவத்தின் விளைவாக மரணம் என்ற தண்டனை உண்டாவதையும் இயேசு நம்பினார். சிலர் தண்டிக்கப்படுவார்கள் என்று அவர் கூறினார். சில நிபந்தனைகள் நிறைவேற்றப்படாவிட்டால் அதன் விளைவாக தண்டனை தரப்படும், என்றும் அவர் நம்பினார். இழந்து போகப்படாமலிருக்க தேவனுக்குக் கீழ்ப்படிவது அவசியம் என்று கூட இயேசு கூறினார் (மத். 7:21). இயேசுவால் தண்டிக்க முடியும், அவர் தண்டனை தருவார் என்றால், அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதே நான் தெய்வ பக்தியுள்ளவன் என்று காட்டுவதாகும்.

## ஏனெனில் விசுவாசம் என்பது ஒரு மாய பானம் அல்ல

இயேசுவை விசுவாசித்தால் எல்லாம் சரியாகி விடும் என்ற ஒரு ஜனரஞ்சகமான கொள்கை உள்ளது. இரட்சிக்கப்படும்படி நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் விசுவாசம் மட்டுமே என்று அது கூறுகிறது. இயேசுவே கர்த்தர் என்று ஒப்புக் கொண்டு, அவரது தெய்வீகத்தை விசுவாசித்து விட்டால் நீங்கள் மற்ற எதைச் செய்தாலும் செய்யத் தவறினாலும் இரட்சிக்கப் படுவீர்கள் என்றும் அக்கொள்கை கூறுகிறது.

ஆனால் விசுவாசம் மட்டும் இரட்சிக்காது (யாக். 2:24). விசுவாசம் மிகவும் அவசியமானதாகும் (யோவா. 3:16). ஆனால் அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே இரட்சிக்கும் (கலா. 5:6). இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கும் பொழுதே நீங்கள் இரட்சிக்கப்படுவதில்லை. அந்த உண்மையை நீங்கள் விசுவாசிக்கின்றபோது, உங்கள் விசுவாசமானது அவருடைய சித்தத்திற்கேற்ற கிரியைகளை நீங்கள் செய்யும்படி உங்களை அனுமதிக்க வேண்டும். உங்கள் விசுவாசத்தினால் நீங்கள் தேவனுடைய சித்தத்தை நிறை வேற்றும்பொழுதுதான் நீங்கள் இரட்சிக்கப்படுகிறீர்கள், அதற்கு முன் அல்ல. அப். 2ல் பேதுரு கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கித்தபோது சிலர் விசுவாசித்தனர். அவர்கள் இயேசுவை கர்த்தர் மற்றும் கிறிஸ்து என்று விசுவாசித்தனர். எனவே அவர்கள், ''நாங்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டனர். பேதுரு அந்த யூதர்களிடம், அவர்கள் தேவை யானதை எல்லாம் செய்து விட்டதாகவோ அதனால் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டு விட்டதாகவோ கூறவில்லை. அவர் அந்த விசுவாசிகளிடம்: "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' என்றார் (அப். 2:38). விசுவாசம் மட்டும் போதுமானதல்ல; மனந்திரும்புதலும், ஞானஸ்நானமும் தேவைப்படுகிறது. நாம் தேவபக்தியுள்ளவர் களாவதற்கு அவருக்குக் கீழ்ப்படிவது அவசியமாகும்.

## ஏனெனில் தேவன் கிறிஸ்துமஸ் தாத்தா போன்றவரல்ல

கிறிஸ்துமஸ் சமயத்தில் பரிசுகள் கொண்டுவரும் கிறிஸ்துமஸ் தாத்தா என்ற வயது முதிர்ந்த, வெள்ளை தாடி வைத்த கற்பனைப் பாத்திரத்தைப் போலவே தேவனும் இருக்கிறார் என்று எண்ணும்படியான சோதனையை சிலர் பெறுகின்றனர். இந்த கிறிஸ்துமஸ் தாத்தா கூட, நல்ல குழந்தைகளுக்கு மட்டுமே பரிசு தருவார் என்று நாம் அறிந்திருந்தாலும் கூட, வருடம் முழுவதும் குறும்புத்தனம் செய்யும் குழந்தைகளுக்குப் பரிசு தருவதைக் கூட அவர் தவறவிடுவதில்லை என்று அறிந்துள்ளோம். கிறிஸ்துமஸ்

தாத்தா எதையும் நம்மிடம் வேண்டுபவரல்ல, குழந்தைகளின் குறும்புத்தனத்தைக் கண்டும் காணாமல் விட்டு, கிறிஸ்துமஸ்ஸின் போது அவர் பொம்மைகள் தந்து கொண்டு தான் இருக்கிறார்.

தேவன் அப்படிப்பட்டவர் என்று நாம் எண்ணுகிறோமா? வாழ்க்கையில் நல்லவர்களுக்கே அவர் வெகுமதியளிக்கிறார் என்று நாம் அறிவோம். ஆனால், எப்படியோ, சில சமயங்களில் வாழ்க்கையில் நன்மை தீமை செய்த யாவருக்கும் வெகுமதி யளிக்க அவர் ஒரு வழியைக் காண்பார் என்று நாம் எண்ணத் தலைப்படுகின்றோம். ''நரியின் வலைகளில் நாத்திகர்கள் இல்லை" என்று ஒரு சொல்வழக்கு உண்டு. ஊழியக்காரரையும் மற்றும் உறவினர்களையும் கவனிக்கையில் இத்துடன், "சண்டாளர்கள் சவப் பெட்டிகளில் இல்லை" என்பதைக் கூட நாம் சேர்த்துக் கொள்ள வேண்டியதாயிருக்கும். ஒரு மனிதன் தனது வாழ்வில் எவ்வளவு மோசமானவனாயிருப்பினும், அவன் மரிக்கின்ற போது, அவனை மன்னிக்க தேவன் ஒரு வழியை வைத்திருப்பார் என்று எப்பொழுதும் நாம் நம்புகிறவர் களாய்க் காணப்படுகிறோம். மேலும் தேவன் மரணத்திற்குப் பின் பரலோகத்தில் அனைவருக்கும் இடமளிப்பார் என்றும் நம்புகிறோம். தேவன் ஒரு நல்ல, வயது முதிர்ந்த மனிதர் என்றும், அவர் எப்பொழுதும், "நீ இதைச் செய்ய வேண்டும் என்று நினைத்தால் செய்; அது நல்லதே. உன்னை நான் மன்னித்து விடுவேன்" என்று கூறிக் கொண்டிருப்பார் என்றும் நாம் எண்ணுகிறோம்.

தேவன் அப்படிப்பட்டவரல்ல! தேவன் நல்லவர், அன்புள்ளவர், ஆனால் தேவன் அதிலும் மேலானவராக, நீதியுள்ளவராக இருக்கிறார். அவர் தம் நீதியின் தன்மையானது, அவர் கிருபையும் மன்னிப்பும் அளிப்பது போல, கண்டிப்பும் தண்டனையும் வழங்க வேண்டும் என்பதிலேயே விளங்கு கின்றது. தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பற்றி வேதம் பேசுகின்றது (ரோமர் 11:22). அது, "ஜீவனுள்ள தேவனு டைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (எபி. 10:31) என்று கூறுகிறது. நீங்கள் விரும்புகின்ற எதை வேண்டு மானாலும் செய்துவிட்டுப் பின்பு அதிலிருந்து நீங்கள் தப்பிக்க முடியாது, ஏனென்றால், தேவன் நீதியுள்ளவர், அவர் மனந்திரும்பாத, மன்னிக்கப்படாத பாவிகளை தண்டித்தேயாக வேண்டும், நிச்சயம் அவர் அதைச் செய்வார். எனவே தேவ

## ஏனெனில் மரணம் ஒரு முடிவல்ல

பல மனிதர்கள், மனிதன் ஒரு வயதான நாயைப் போன்றவனே - அவன் மரணத்தோடு எல்லாம் முடிகிறது என்று எண்ணுகின்றனர். இது உண்மையென்றால், நாம் தேவபக்தியுள்ளவர்களாயிருக்க வேண்டிய அவசியமே இல்லை. கல்லறைக்கு அப்பால் கணக்கு ஒப்புவிப்பது ஒன்றும் இல்லையென்றால், இந்த வாழ்க்கையை நாம் விரும்பும் வகையில் அனுபவித்துச் செல்லலாமே! தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல் பற்றிக் கவலைப்பட காரணம் எதுவும் இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் மரணத்தோடு நமது இருப்பு நிலை முடிவடை வதில்லை, கல்லறைக்கு அப்பாலும் நாம் வாழ்கின்றோம். "அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படை வதும்" (எபி. 9:27) என்று வேதம் கூறுகின்றது. மரணத்திற்குப் பின் வரும் நியாயத்தீர்ப்பில் நாம் அனைவரும் தேவனுக்கு முன்பாக நின்று, நமது சரீரத்தில் நாம் நடப்பித்த எல்லாக் கிரியைகளைக் குறித்தும் கணக்கொப்புவிக்க வேண்டும். நாம் நியாயந்தீர்க்கப்படுவோம். பரலோகத்திலோ அல்லது நரகத்திலோ நித்தியத்திற்கும் இருக்க வேண்டி வரும். தேவபக்தியுள்ளவர்களாய், தேவனுடைய சித்தத்தை நிறை வேற்ற இது போதுமான காரணமில்லையா?

## ஏனெனில் நீங்கள் சக்திமானைப் போன்றவரல்ல

தான் இழந்துபோகப்பட்ட நிலையில் உள்ளதை அறிந்து, இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்றும் அறிந்துள்ள ஒரு மனிதரைப் பற்றி எண்ணிப்பாருங்கள். அவர் வருங்காலத்தில் ஒரு நாளில் செயல்பாட்டில் (மனந்திரும் புதலில்) ஈடுபடலாம் என்று திட்டம் வகுக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர், "ஒரு வேளை அடுத்த வாரம், அடுத்த மாதம் அல்லது அடுத்த வருடம். பிறகு நான் கிறிஸ்து விடம் வந்து, தேவனுக்கு ஊழியம் செய்யத் தொடங்குவேன், பின்பு நான் தேவபக்தியுள்ளவனாவேன்" என்று கூறுகிறார்.

அவர் தம்மை ஒரு சக்திமான் என்றும், தனது வாழ்வு மற்றும் சூழ்நிலை யாவற்றையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்ப தாகவும் எண்ணுகின்றார் போல தெரிகிறது. ஒன்றும் அவரைக் கவலைப்படச் செய்வதில்லை. மிக மோசமான வியாதி? இல்லை, அவர் வியாதிப்பட மாட்டார், ஏதேனும், விபத்து? இல்லை, அவர் விபத்தில் அகப்பட மாட்டார் என்று அவரே உறுதியளிக்கக் கூடும், துன்பம்? பிரச்சனையே இல்லை, தமது மணிக்கட்டினால் ஒரு குத்து விட்டு துன்பத்தைத் தகர்க்க முடியும். காலத்துக்கு முந்திய அல்லது அகால மரணம்? அதைக் குறித்து அவர் கவலைப்பட தேவையில்லை. கிறிஸ்தவனாவது இன்னும் இது போன்ற தாம் விரும்பும் பல நல்ல செயல்களைச் செய்வதற்காக அதிக நாட்கள் அவர் வாழுவார் என்பது நிச்சயமாய் தெரியும்.

எனது நண்பரே, நீங்கள் இது போல நினைத்தீர்களென் றால், உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்ளுகிறீர்கள். “நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே, உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றா மற் போகிற புகையைப் போலிருக்கிறதே” (யாக். 4:14) என்று யாக்கோபு கூறுகிறார். யாருமே சக்திமான் அல்ல. யார் ஒருவரும், தமக்கும், தம்முடைய விருப்பங்களை நிறைவேற்று தலுக்கும் இடையில், வியாதி, விபத்து, துன்பங்கள் அல்லது அகால மரணங்கள் ஏற்படாது என்று உறுதியளிக்க இயலாது. நீங்கள் சக்திமான் அல்ல. கிறிஸ்துவினிடத்தில் திரும்ப உங்களுக் குப் போதிய அவகாசம் இருந்ததை உறுதிப்படுத்த, இன்றே கிறிஸ்துவினிடம் வருவது தான் ஒரே வழி, இன்றே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தெய்வ பக்தியுள்ளவர்களாகுங்கள்.

## ஏனெனில் மனிதர் யாவரும் தவிர்க்க முடியாத வகையில் தேவ பக்தியுள்ளவர்களே

மனிதர் தவிர்க்க முடியாத வகையில் தேவபக்தியுள்ளவர் களாயிருக்கின்றனர். அதாவது, நீங்கள் ஏற்கனவே தேவ பக்தியுள்ளவராயிருப்பதால், உங்களை தேவ பக்தியுள்ளவர் களாகும்படி தூண்டுவது என்பது ஒரு வகையில் அளவுக்கு அதிகமானதாகும்.

ரோமர் 1ம் அதிகாரத்தில் பல மோசமான பாவங்களால் நிறைந்துள்ள ஜனங்களைப் பற்றிப் பவுல் கூறுவதை வைத்து இதை விளக்க முடியும். அவர்கள் தேவனைப் புறக்கணித்தனர், எனவே தேவனும் அவர்களைப் புறக்கணித்தார். அவர்கள் கொலைகாரர்களாயும், துராகிருதம் பண்ணுகிறவர்களாயும், புறங்கூறுகிறவர்களாயும், ஆண் புணர்ச்சிக்காரர்களாயும், தேவ பகைவர்களாயும் இன்னும் பல பாவம் செய்கிறவர்களாயும் இருந்தனர். இதனால் அவர்கள் தேவபக்தியற்று இருந்தனர் என்று நாம் முடிவு செய்ய வேண்டுமா? ரோமர் 1:25ஐ கவனியுங்கள்: "தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல், சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென் றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்." அவர்கள் பாவ உணர்வு பெற்றிருந்தும், தொழுது கொண்டிருந்தனர். அவர்கள் தவறானவைகளைத் தொழுது கொண்டிருந்தனர்; சிருஷ்டி கருக்குப் பதிலாக சிருஷ்டியைத் தொழுது கொண்டனர். ஒவ்வொருவரும் ஏதோ ஒன்றைத் தொழுது கொள்ளுகின்றனர் என்றே நான் யோசிக்கிறேன். ஒருவர் சிருஷ்டிகரைத் தொழுது சேவியாவிட்டால், சிருஷ்டியைத் தொழுது சேவிக்கிறார்.

இந்நாட்களில் மனிதர் பல பொருட்களைத் தொழுகின்ற னர். சிலர் பணத்தை வணங்குகின்றனர். அவர்கள், பணம் சந்தோஷத்தைக் கொண்டுவரும் என்று எண்ணுகின்றனர், எனவே வல்லமை வாய்ந்த அந்தப் பணக்கட்டுகளுக்கு ஊழியம் செய்யத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றனர். மற்ற சிலர் சந்தோஷத்தை தொழுது கொள்ளுகின்றனர்; எப்பொழு தும் நல்ல நேரமாயிருக்க வேண்டும் என்று அவர்கள் நினைக் கின்றனர். சிலர் அறிவியலைத் தொழுது கொள்கின்றனர். எல்லா பதில்களுக்கும் அவர்கள் அறிவியலையே நோக்குகின்ற னர். போதுமான அளவு முன்னேறிய தொழில் நுட்பமும், அல்லது அறிவியலில் இருந்து போதிய அளவு கற்றலும் இருந்திருந்தால் நாம் இந்தப் பூமியிலேயே பரலோகத்தை நிர்மாணிக்க முடியுமே! மற்ற சிலர் பாவத்தை தொழுகின்றனர். பாவம் அவர்களை அடிமைப்படுத்தி, ஆக்கிரமித்துள்ளதால் அவர்கள் வேறு எதன் மீதும் நாட்டம் கொள்வதில்லை. ஆனால் இங்கு, கருத்து யாதெனில் ஒவ்வொருவரும் ஏதோ ஒன்றைத் தொழுது கொள்கின்றனர் என்பதுதான்.

எனவே தொழுது கொள்வதா இல்லையா என்பது உங்கள்

*தேர்வு அல்ல; மாறாக எதைத் தொழுது கொள்ளுகிறீர்கள் என்பதே உங்கள் தேர்வாகும். இயேசு: "இரண்டு எஜமான் களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது" (மத். 6:24) என்று இந்தக் தேர்வைப் பற்றிக் கூறினார். இங்கு உங்கள் தேர்வு உள்ளது: தேவனா அல்லது உலகப் பொருளா? சிருஷ்டிகரா அல்லது சிருஷ்டியா? எது உங்களுடையது?*

## *முடிவுரை*

*இவ்வித வாய்ப்பு தரப்பட்டிருக்கையில், தேவனைத் தொழுது கொண்டு அவரைச் சேவிப்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமா? அதைச் செய்யாமலே நீங்கள் சந்தோஷ மாயிருக்க முடியுமா? ஆம், நேர்மையாய்க் கூறுவதென்றால், தேவனை தொழுது கொள்ளாமலே நீங்கள் சந்தோஷமுள்ள வராய் ஓரளவு இருக்க முடியும். ஆனால் நிறைவான, சந்தோஷமுள்ள, முழுவளம் பொருந்திய வாழ்வானது, நமது கர்த்தரைத் தொழுது கொள்வதாலேயே வருகிறது. இயேசு இதைச் சொன்ன விதத்தை நான் மிகவும் விரும்புகின்றேன்:*

> *என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டை யாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனை யாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளை யாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடு கூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களை யும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மாற்கு 10:29, 30).*

*கிறிஸ்தவம் என்பது "பின்னாளில் பரலோகத்தில் உள்ள வாழ்க்கை" மட்டுமல்ல, இந்த வாழ்விலும் அது ஆச்சரியமான ஆசீர்வாதங்களைத் தருகின்றது.*

*ஆனால் வேறு எதனாலும் தர முடியாத ஒன்றை கிறிஸ்தவம் தருகின்றது: "... மறுமையிலே நித்திய ஜீவன்!" கிறிஸ்து இல்லாமலே நீங்கள் சந்தோஷமாய் வாழ்வைக் கொண்டு*

செல்ல முடிந்தாலும், உலகப் பொருளுக்கு மாறாக தேவனை சேவிப்பதை நீங்கள் தெரிந்து கொள்வது நிச்சயமாகவே பலன் தரும். ஏனெனில் இவ்வுலகத்தில் கிறிஸ்து ஒருவரே உங்களைப் பரலோகத்திற்குக் கொண்டுசேர்க்க முடியும்.

இன்றே நீங்கள் அவரைத் தேர்வு செய்ய வேண்டும். இஸ்ரவேல் ஜனங்களுக்கு, யோசுவா, "யாரைச் சேவிப்பது என்பதை இன்றே தெரிந்து கொள்ளுங்கள்" (யோசு. 24:15) என்று அறைகூவல் விடுத்தார். பலர் தங்கள் முடிவுகளை ஒத்தி வைக்க விரும்புகின்றனர். அவர்கள், "நான் உம்மைத் தெரிந்து கொள்வேன், ஆனால் இப்பொழுது அல்ல, இன்னும் சில காலத்துக்குப் பின்பு'' என்று கூறுபவர்களாய்க் காணப் படுகின்றனர். பின்னாளில் ஒரு காலம் வரும் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் பெற்றுள்ளதெல்லாம் இன்றைய நாள் தான். நீங்கள் இன்றே கிறிஸ்துவைத் தெரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் தெரிவு செய்ய வாய்ப்பு இப்பொழுது கிடைத்துள்ளது. உண்மையில், நீங்கள் இவ்வாய்ப்பை இன்று பெற்றுள்ளீர்கள், இல்லை நீங்கள் கிறிஸ்துவைத் தெரிவு செய்யாவிடில், உலகத்தைத் தெரிவு செய்துள்ளீர்கள் என்று பொருள். நீங்கள் இதில் நடுநிலை வகிக்க முடியாது, "உங்களுக்காகத் தெரிவு செய்யுங்கள்" - கிறிஸ்துவைத் தெரிவு செய்யுங்கள்.

---

**குறிப்பு**

[1]The Sun-Herald, Sydney, N.S.W. January 1971.